# சித்திரக்கவியில் கண்டுபிடிப்புகளும் புதுமைகளும்

*கு. திலகவதி*
முனைவர் பட்ட ஆய்வாளர்
கருப்பண்ண மாரியப்பன் கல்லூரி, முத்தூர்
https://doi.org/10.5281/zenodo.15526569

**முன்னுரை**

***சுவை புதிது, பொருள் புதிது,***
***வளம் புதிது, சொற்புதிது***
***சோதிமிக்க நவகவிதை***

*எந்நாளும் அழியாத மாகவிதை! பாரதியார். எந்நாளும் அழியாதது எதுவோ அது புதியது. இன்றைய பயன்பாட்டில் இருப்பது எதுவோ அது புதியது.வேத நுட்பம் விளங்கிடச் செய்து "வேதம் புதுமை செய்" என்று சொன்னவன் மகாகவிபாரதி. சொன்னவண்ணமே சாதித்தும் காட்டிய பெரும் சிந்தனையாளர் அவர். வேதத்திலும் புதுமை தேவை என்னும் போது நம் இலக்கிய இலக்கணங்க்களை பயிலவதிலும், பயிற்றுவிப்பதிலும், புதிய படைப்புகளை உருவாக்குவதிலும் புதுமை அவசியமே.*

*கலை உணர்வும் கற்பனைத் திறனும் கவிப்புலமையும் ஒருங்கே பெற்று அமைப்பதே சித்திரக்கவி. கட்டுக்கோப்பான எண்ணமும் கவர்ச்சியும் கருத்து புறப்பாடும் தோன்றச் செய்வது இவற்றின் தனிச்சிறப்பு. வடிவம் பொருண்மை வெளியீட்டு முறை என ஒவ்வொரு கூறிலும் தனித்து ஒரு நிலையினை தமிழ் இலக்கிய உலகில் தோற்றுவித்திருப்பது சித்திரக்கவிகளின் சிறப்பாகும். நாற்கவிகளுள் ஒன்றாக சிறப்பிடம் பெற்றுள்ள சித்திரக்கவி படைப்பாளர்கள் தற்காலத்தில் மிகவும் குறைவு. மரபுக் கவிஞர்களே எழுதுவதற்கு சிரமப்படும் இச்சித்திரக்கவியினை இன்றைய தொழில்நுட்பத் துணையோடு கணிணியில் எக்செல் மூலம் உருவாக்கியிருக்கிறார் அந்தமான் கிருஷ்ணமூர்த்தி என்னும் பொறியாளர்.இது போன்ற புதுமைகள் மொழிக்கு கூடுதல் பலம் சேர்ப்பவையாகும். அவ்வகையில் சதுரங்க பந்தம் என்னும் சித்திரக்கவியையும், அதனை எஃஸ்செல் மூலம் எவ்வாறு எளிதாக படைக்கலாம் என்பதையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

**சித்திரக்கவி இலக்கணம்**

***ஆசு மதுரஞ் சித்திரம் வித்தார***
***மாகு நாற்கவி யறையுங் காலே***
***(குவலயானந்தம்-சித்திரையியல் 3)***

*ஆசு மதுரம் சித்திரம், வித்தாரம் எனக் கவிதை வகைகள் நான்கினுள் மிறைகவி என்று சிறப்புடன் அழைக்கப்படும் சித்திரக்கவி சிறப்பு வாய்ந்ததாகும்.*

*சித்திரம் + கவி = சித்திரக்கவி ஆகும். சி த்திரகவி என்பது நாற்கவிகளுள் ஒன்று அது மாலை மாற்று முதலாக குறிப்பிடப்படும் மிறைக்கவி வண்ணப்பா, வண்ணக்கவி என்று அகராதிகள் குறிப்பிடுகின்றன.*

***ஏக பாத மெழுகூற் றிருக்கை***
***காதை கரப்புந் கரந்துறைச் செய்யுள்***
***கூட சதுக்கங்க் கோமுத் திரிமுத***
***றெரிந்து பாடுவோன் சித்திரக்கவியே***
***முத்து வீரியம் 58***

**சித்திரக் கவிகளின் தனித்தன்மை**

*ஆசுகவி-கடுங்கவி என்றும், மதுரகவி-இன்கவி என்றும், வித்தார கவி-பெருங்கவி என்றும் கூறுமிடத்து, சித்திரக்கவி-அருங்கவி என அழைக்கப்படுவதிலிருந்து அதன் தனித்தன்மையை உணரலாம். (யாப்பருங்கல விருத்தி உரை பக்கம் 551-552)*

**சொற்சித்திரக்கவி வடிவச்சித்திரக்கவி**

எழுத்துகளால், சொற்களால், வாக்கிய அமைப்புகளால், சொற்களின் பொருளால் அமைக்கப்படுவது சொற் சித்திரக் கவிகளாகும். பந்தம் என்னும் வடிவச் சித்திரக்கவிகள் ஒரு குறிப்பிட்ட வடிவத்திற்குள் பொருந்துமாறு யாப்பில் பாடுவது ஆகும்.

**சதுரங்கதுரககதிபந்தம்**

பரிகாலில் வேறுபாடு இருக்கும் சதுரங்கம் என சதுரங்க துரக கதி பந்தத்தை சுவாமிநாதம் முதன்முதலாக குறிப்பிடுகிறது.

**எழும் பரிக்கால் முதல் பேதஞ் சதுரங்கம்**

**சுவாமிநாதம் 197.**

**அறுபத்து நாலறுபத் திரண்டைம்பா னாற்பானான்கு**
**அடுத்த முப்பத் தாறிருத் திரண்ட**
**பெறுமக்க ரங்களொன்று**
**முதழேழு வரை நிகர்ப்பப்**
**பின்னும் ஐம்பத்தேழைம்பான்**
**மூன்றொடு நாற்பான்மூன்று**
**உறுமுப்பத் தொன்பதுபன் னேழ்பதினைந்து**
**உள எழுபத் திரண்டு முதல் எழுபத்தெட் டீறா**
**மறுவற்று வரப்பாடும் கவிதைசது ரங்க பந்தம்**
**வழுத்திய அஃதெழுபத்தெட் டெழுத்தின் முடி குவதே"**

**(இலக்கண விளக்கம் பின் இணைப்பு)**

**"சதுரங்க வகையிற் சதிர் பெற வமைப்பது சதுரங்க பெந்தமென் றறை தருந் தன்மை"**

**மாறனலங்காரம் சூத்திரம் 53,**

**நைட்ஸுட் எனப்படும் மாவீரனின் சுற்றுப்பயணம்**

மாவீரர் சுற்றுப்பயணம் என்பது ஒரு சதுரங்கப் புதிர், இதில் ஒரு மாவீரர் சதுரங்கப் பலகையில் உள்ள ஒவ்வொரு சதுரத்தையும் சரியாக ஒரு முறை பார்வையிடுவார். இது திறந்திருக்கலாம் (மாவீரர் தொடக்க சதுரத்திற்குத் திரும்புவதில்லை) அல்லது முடப்பட்டிருக்கலாம் (மாவீரர் தொடக்கத்திலிருந்து ஒரு மாவீரர் நகர்ந்தவுடன் ஒரு சதுரத்தில் முடிவடைகிறது). மாவீரர் ஒவ்வொரு சதுரத்தையும் ஆராய அனுமதிக்கும் நகர்வுகளின் வரிசையைக் கண்டுபிடிப்பதே குறிக்கோளாகும். மாவீரர்கள்"ஃ" வடிவத்தில் நகரும்: ஒரு திசையில் இரண்டு சதுரங்கள், பின்னர் செங்குத்தாக ஒரு சதுரம் என்ற வரிசையில் நகருவர். சதுரங்கப் பலகையில் உள்ள ஒவ்வொரு சதுரத்தையும் சரியாக ஒரு முறை பார்வையிட வேண்டும்.

இந்தப்பிரச்சினைநிலையான8x8சதுரங்க கட்டத்தில் நிகழ்த்தப்பெறும். ஒரு மாவீரரின் சுற்றுப்பயணத்தைக் கண்டுபிடிப்பது, ஆழமானது. இது வரைபடக் கோட்பாட்டில் ஒரு உன்னதமான பிரச்சனை, இது பல நூற்றாண்டுகளாக கணிதவியலாளர்களால் சிந்திக்கப்பட்டு வருகிறது. கணினி அறிவியல் கருத்துக்களைக் கற்பிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு பொதுவான நிரலாக்கப் சிக்கலாக ஒரு மாவீரரின் சுற்றுப்பயணத்தைக் கண்டுபிடிப்பது உள்ளது.

**மூடிய சுற்றுப்பயணங்கள் மற்றும் திறந்த சுற்றுப்பயணங்கள்**

ஒரு மூடிய சுற்றுப்பயணம் என்பது ஒரு சுழற்சியாகும், இது மாவீரர் மீண்டும் மீண்டும் சுற்றுப்பயணத்தைத் தொடர அனுமதிக்கிறது, அதே நேரத்தில் திறந்த சுற்றுப்பயணம் என்பது முடிவடையும் பாதையாகும்.சதுரங்க துரக கதி பந்தம் இந்த நைட் டூட் எனப்படும் மாவீரனின் சுர்றுப்பயணப் பாதையில் தான் பயணிக்கிறது. சதுரங்க விளையாட்டில் குதிரையின் நகர்வுகளை அடிப்படையாக் கொண்டு இது அமைந்திருக்கிறது.சதுரங்க பந்தத்தில் குதிரையின் நகர்வினை ஒட்டி எழுத்துகளை அமைத்து யாப்பு விலகாமல் எட்டெழுத்து சொல்லும் பொருந்தும் படி பாடவேண்டும். சதுரங்கத்தில் அமைக்கப்பட்டிருக்கின்ற 64 கட்டங்களில் ஒரு கட்டத்திலிருந்து துவங்கி, குதிரை எப்படி நகருமோ, அப்படி ஒவ்வொரு கட்டமாக நகர்ந்து அடுத்து கட்டங்களிலும் செல்லும் முறையைக் குதிரைப்பாதை என்று சொல்கிறார்கள் Knite"s Route என்று ஆங்கிலத்திலும் சொல்வர்

இது 64 எழுத்துக்களை உடையதாய் சதுரங்க அறை ஏதேனும் ஒன்றிலிருந்து தொடங்கி சதுரங்க அறைகளின் குதிரை

*முதலியவற்றின் நடைமுறைப்படி அடைக்கும் போது சதுரங்க அறைகளும் கவி கருதியிடத்தில் கவி கருத்தியவாறு இடையினின்றி பாட்டுடைத் தலைவன் பெயரேனும் கவி கருதிய பிறவேனும் அழகுற அமைப்பு விளங்குவதாய் இயற்றப்படும் செய்யுளாம் இது சதுரங்க துரக கதிபந்தம் சதுரங்க அசுவகதி பந்தம் என்றும் அழைக்கப்படும்.*

*(சூரிய நாராயண சாஸ்திரி வல்லீ பரிணாம நாடகம், ஆசிரிய வணக்கம், சித்திரக் கவி விளக்கம்)*

**எக்செலில் சதுரங்க பந்தம்**

*மிகவும் கடினவகை சித்திரக்கவியாகிய சதுரங்க பந்தத்தை அந்தமான் கிருஷ்ணமூர்த்தி என்னும் பொறியாளர் எக்செலின் துணை கொண்டும் இன்றைய தொழிநுட்ப வசதிகளைக் கொண்டும் எளிதாக படைத்திருக்கிறார். எக்செலில் இதை எழுதுவதற்கான வழிமுறைகளைக் காணலாம்.*

*சதுரங்க பந்தம் என்பது 64 கட்டங்கள் கொண்ட சதுரங்க ஆடுகளத்தில் கட்டங்களில் வடிவமைக்கப்படும் சித்திரக்கவி ஆகும். சித்திரக்கவியில் 64 எழுத்துகளைக் கொண்டு அதனை குதிரையின் ஓட்டம், சிப்பாயின் நகர்தல், யானையின் பயணம் போல் எழுத்துகளை நகர்த்தி, சொல்லாக்கி கவி ஆக்கும் முறை. எக்செல் மூலம் இதனையும் சுலபமாய் செய்தல் முடிகிறது.*

*இதனை வடிவமைக்க முதலில் நமக்கு தேவையானது 64 கட்டங்களையும் பூர்த்தி செய்கின்ற எண்கள் கொண்ட ஓவியம் வேண்டும். இதனை இணைய தளங்களில் இறக்கிக் கொள்ளலாம். 64 கட்டங்கள் உள்ள சதுரங்கப் பலகையில் எந்த கட்டத்தில் இருந்து துவங்க வேண்டும் என்பதை இணையதளத்தில்* ChatGPT *போன்ற செயற்கை நுண்ணறிவு மென்பொருள் மூலமாகவும் கேட்டு தரவிறக்கம் செய்து கொள்ளலாம். இதனை தொழில்நுட்பம் மிகவும் எளிய முறையில் செய்து தந்துவிடுகின்றது. அடுத்த கட்டமாக நாம், ஒரு எட்டு எழுத்துகளை வைத்துக் கொண்டு நகர வேண்டும். உதாரணமாக தட்சிணாமூர்த்தி என்ற எட்டு எழுத்தை வைத்துக் கொண்டு நம் சித்திரக்கவி அமைய உள்ளது. இதை ஒரு தலைப்பாகக்கூட கருதலாம். இந்த தலைப்பை ஒட்டியே நாம் சித்திரக்கவியை அமைக்க இருக்கிறோம். இதன்மூலமாக அந்த சித்திரக்கவியில் பளிச்சென்று இந்த எட்டு எழுத்துக்கள் தான் தெரிய வேண்டும். 64 எழுத்துக்கள் கொண்ட சித்திரக்கவியில், ஏதோ எட்டு இடங்களில் இவைகள் வந்திருக்க வேண்டும். அவை ஒரு ஒழுங்கு முறையில் மேலிருந்து கீழாகவும், இடமிருந்து வலமாகவும், வலமிருந்து இடமாகவும் இடமாகவும், கீழிருந்து மேலாகவும், வலது பக்கம் சாய்ந்து இடது பக்கம் சாய்ந்து இப்படியாக ஏதோ ஒரு ஒழுங்கு முறையில் அமையப்பட்டு பார்வை பளிச்சென தெரிகின்ற அளவில் இருத்தல் அவசியமாகும் .அடுத்ததாக இந்த எட்டு எழுத்துக்கள் அந்தந்த இடங்களில் எந்த இடங்களில் அமைந்திருக்கிறதோ அந்த இடங்களில் அதனை அமைத்தல் வேண்டும். படம் மற்றும் சித்திரக்கவி ஆக்கம்-அந்தமான் கிருஷ்ணமூர்த்தி, மூத்த திட்ட ஆலோசகர், விலிஞ்சம் துறைமுகம்,கேரளா)*

*வெண்பா நான்கு அடியில் அமைதல் வேண்டும். ஒவ்வொரு அடியிலும் 4 சீர்கள் இருத்தல் வேண்டும். ஈற்றடியில் மட்டும் மூன்று சீர்களில் அமைய வேண்டும். ஈரசைச்சீராக அமைக்கும் போது, சொல்லின் நிலைச்சீர் நேரில் முடிந்தால், வரும் சீர் நிரையில் துவங்க வேண்டும். மாறாக சொல்லின் நிலைச்சீர் நிரையில் முடிந்தால், வரும் சீர் நேரில் ஆரம்பிக்க வேண்டும். இதே போல் மூன்று சீர்களைக் கொண்டு சொற்களை பயன்படுத்தி இருப்பின், கனிச்சீர் (அதாவது மூன்றாம் சீர் நிரையாக வருதல்) தவிர்க்க வேண்டும். மூன்று சீர் கொண்ட சொற்களில், நிலைச் சொல் நேரில் சீரியல் முடிந்தால், வரும் சீர் நேரில் தான் துவங்க வேண்டும். குற்றியலுகரப் பிழைகள் தவிர்த்து,*

எதுகையும் மோனையும் கூடி வருதல் அழகு தரும். ஈற்றடியின் ஈற்றுச் சீர் நாள், மலர், காசு, பிறப்பு போன்றவற்றில் முடிந்திருத்தல் வேண்டும். ஒரு வெண்பாவில் இவைகள் எல்லாம்சரியாகப்பொருந்து இருக்கின்றனவா என்பதை அவலோகிதம் போன்ற யாப்பு மென் பொருளை வைத்துக்கொண்டு பரிசோதனை செய்துகொள்ளலாம். மென்பொருள் தானே என்று எளிதாக அதனை நாம் நெருங்கிவிட இயலாது. அடிப்படையில் மரபுப்பா படைத்தல் பற்றிய அடிப்படை ஞானம் இருந்தால் மட்டுமே அந்த மென்பொருளும் கை கொடுக்கும்.

இப்படியாக ஒரு வெண்பாவும் தயார். இந்த வெண்பாவினை சித்திரக்கவியில் எக்செல் மூலம் இணைத்து விட்டால் போதும். அதனை மீண்டும் மீண்டும் பல முறை பல சதுரங்க பந்தம் படைக்க உபயோகம் செய்து கொள்ளலாம். முதலில் பிரமிப்பாய் இருந்த சதுரங்க பந்தம் இப்போது எளிமையாகி விடும். இந்த முயல்வின் முடிவில் பார்க்கும் பொழுது, ஒரு சித்திரக்கவியை எழுதுவதற்கு 30 நிமிடங்கள் கூட தேவையில்லை என்பதுதான் மிகவும் மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். மேலும் தலைப்பினை ஒட்டி நம்மால் மாற்றம் செய்யவும் இயலும். கட்டாயத்தின் பேரில் இப்படியான மாற்றங்கள் சில சமயங்களில் தேவைப்படலாம். உதாரணமாக மெய்யெழுத்துகள் ஏதேனும் அடிகளின் துவக்கத்தில் வருமாறு அமைந்தால், அதனை தமிழ் இலக்கணம் ஒப்பாது. அந்நேரங்களில் மாற்றம் செய்யவும் எக்செல் மூலம் சாத்தியம்.

**முடிவுரை**

காலத்தை வென்று கணிணியிலும் கோலோச்சும் தமிழ் மொழியின் வளத்தை மேலும் மெருகூட்ட அதன் இலக்கண இலக்கிய வளங்களை இணையத்தில் ஏற்ற வேண்டும். தற்கால தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி இலக்கணங்களைக் கற்றுக் கொள்வது எளிமையானது. அவ்வகையில் இலக்கணத்தில் சிறப்பானதாகக் கருதப்படும் சித்திரக்கவியில் மிகவும் கடினமான வகையாகிய சதுரங்க துரத கவி பந்தத்தை எக்செல் உதவியோடு இயற்றியிருக்கும் தி.நா. அந்தமான் கிருஷ்ணமூர்த்தி அவர்களின் இம்முயற்சி, இலக்கண இலக்கிய ஆர்வலர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். சித்திரக் கவி எழுதுதல் எளிமையானது என்ற எண்ணத்துடன் இளையவர்களும் இதனை ஆர்வத்தோடு கற்றுக் கொள்ள முன் வருவர்.

**துணைநூற் பட்டியல்**


1. எளிய முறையில் எக்செல்,தி,நா. கிருஷ்ணமூர்த்தி, கணியத்தமிழ் வெளியீடு, 2006, சென்னை
2. சித்திரக்கவிகள்: வே.இரா.மாதவன், 1983, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
3. சித்திரக் கவிக் களஞ்சியம், வ.ஜெயடேவன், 2007, சென்னை பழ்கலைக்கழகம்
4. சித்திரக்கவித் திரட்டு, ஈழமும் தமிழும்(6), ஞானம் பாலச்சந்திரன், 2016, ஞானம் வெளியீடு
5. மாறனலங்காரம், முத்துவீரியம், சுவாமி நாதம், குவலயானந்தம், தமிழ் இலக்கண நூல்கள், பதிப்பாசிரியர், ச.வே. சுப்பிரமணியன், மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, 2007